# 9 - கரைசல்கள்

**ஒரு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. ஒரு உண்மைக்கரைசல் என்பது, கரைபொருள் கரைப்பானால் ஆன ஒரு படித்தான கரைசல். சாக்பீஸ் துகள்கள் தண்ணீரில் கலந்த கரைசல் பல படித்தான கலவையாகும். இது உண்மைக் கரைசலா?
2. நீரைக் கரைப்பானாகக் கொண்ட கரைசல் நீர்க் கரைசல் ஆகும். கார்பன்-டை-சல்பைடைக் கரைப்பானாகக் கொண்ட கரைசல் ---------- ஆகும். (மார்ச்2013)
   (நீர்க் கரைசல், நீரற்ற கரைசல்)
3. உப்பின் கரைதிறன் 100கிராம் தண்ணீரில் 36கிராம் ஆகும். 20 கிராம் உப்பு நீரில் கரைக்கப்பட்டால் தெவிட்டிய நிலையை அடைய இன்னும் எத்தனை கிராம் உப்பு தேவைப்படும்.
4. இரண்டு திரவங்கள் ஒன்றிலொன்று கரையுமானால் அத்திரவங்கள் ---------------- எனப்படும்.
   (இரண்டறக்கலப்பவை , இரண்டறக் கலவாதவை)
5. சூரிய ஒளி நும் வகுப்பின் ஜன்னல் வழியே வரும்போது, அதன் பாதை தெரிவதன் காரணம் ஒளியின் -------------------- (பிரதிபலிப்பால், சிதறலால்) (செப்2013, ஏப்2014)
6. ஒரு கரைசலின் துகள்கள் நுண்ணோக்கி வழியே தெரிவதானால் அக்கரைசல் ------- எனப்படும்.
   (உண்மைக் கரைசல், கூழ்மக் கரைசல்) (மாதிரி2012, ஜுன்2014)
7. இருமடிக் கரைசலில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை (ஒன்று / இரண்டு)
8. ஆழ்கடல் முத்துக் குளிப்பவர்கள் சுவாசிக்கப்பயன்படுத்தும் வாயுக்கலவை --------------------
   (ஹீலியம் - ஆக்ஸிஜன், ஆக்ஸிஜன் - நைட்ரஜன்) (ஜுன்2012,13)
9. புவியின் மணற்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நைட்ரஜனை தன்னுள் கொள்ள முடியாநிலை --------------------- எனப்படும். (தெவிட்டிய நிலை, தெவிட்டாத நிலை)

**விடைகள்: 1. இல்லை. சாக்பீஸ் துகள்கள் நீரின் அடியில் தங்குவதால் இது தொங்கல் ஆகும்.**
**2. நீரற்ற கரைசல் 3. 16 கிராம் 4. இரண்டறக் கலப்பவை 5. சிதறலால்**
**6. கூழ்மக் கரைசல் 7. இரண்டு 8. ஹீலியம்-ஆக்ஸிஜன் 9. தெவிட்டிய நிலை**

**இரண்டு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1.

| வேதிப்பொருள் | கரைதிறன் 25°C வெப்பநிலை |
|---|---|
| NaCl | 36 கி |
| NaBr | 95 கி |
| NaI | 184 கி |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து நீவீர் உணரும் உண்மைகளை எழுதுக.

**கரைப்பொருளின் தன்மை கரைதிறனைப் பாதிக்கிறது. கொடுக்கப்பட்டவை சோடியம் மற்றும் ஹேலஜன்கள் இணைந்த உப்புக்கள். Cl, Br, I போன்ற ஹேலஜன்களின் அணு எண் அதிகமாக அதிகமாக கரைதிறனும் அதிகரிக்கிறது. வேதிப்பொருள் துகள்களுக்கிடையேயான கவர்ச்சி விசையும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.**

2. தெவிட்டிய கரைசலுக்கும் தெவிட்டாத கரைசலுக்கும் உள்ள வேறுபாடுகளை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் மூலம் எழுதுக. (ஜுன்2012,13, ஏப்2014)
   அ)16கி NaCl 100கி நீரில் ஆ)36கி NaCl 100கி நீரில் (குறிப்பு: NaClன் கரைதிறன் 36 கி)

| | தெவிட்டாத கரைசல் | தெவிட்டிய கரைசல் |
|---|---|---|
| 1. | 16கி **NaCl** 100கி நீரில் | 36கி **NaCl** 100கி நீரில் |
| 2. | குறைந்த அளவு கரைபொருளைக் கொண்டகரைசல் | கரைதிறனுக்குச் சமமான அதிகபட்ச கரைபொருளைக் கொண்ட கரைசல் |
| 3. | தெவிட்டும்நிலை அடையும் வரை மேலும் (கூடுதலாக20கி **NaCl**) கரை பொருளைக் கரைக்கலாம். | சாதாரண முறையில் மேலும் கரைபொருளைக் கரைக்க இயலாது. கரைசலை வெப்பப்படுத்தி மேலும் அதிகமான கரைபொருளை கரைத்தால் அது அதி தெவிட்டிய கரைசலாக மாறும். |

3. சர்க்கரையை நீரில் கரைத்து, அறை வெப்பநிலையில் தெவிட்டிய கரைசலை உருவாக்கிய பின் மேற்கொண்டு சர்க்கரையை கரைக்க முடியுமா? நும் எண்ணத்தை தருக. (மார்ச்2012, ஜூன்2013, ஜூன்2014)

**கரைசலை மேலும் சூடுபடுத்துவதன் மூலம் மேலும் சர்கரையை கரைக்க முடியும். அவ்வாறு கரைத்த பிறகு அது அதி தெவிட்டியக் கரைசலாக மாறுகிறது.**

4. 20கி சமையல் உப்பை 50கி நீரில் கரைத்திருந்தால் அக்கரைசல் செறிவின் சதவீத நிறையைக் கணக்கிடுக. (அக்2012)

$$\text{கரைசல் செறிவின் சதவீத நிறை} = \frac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைபொருள் + கரைப்பானின் நிறை}} \times 100$$

$$= \frac{20\text{கி}}{20\text{கி} + 50\text{கி}} \times 100$$

$$= 28.57\%.$$

**இரண்டு மதிப்பெண் கூடுதல் வினாக்கள்:**

5. உண்மைக்கரைசலை, கூழ்மக்கரைசலிலிருந்து வேறுபடுத்துக. (செப்2013, மார்ச்2013)

| | உண்மைக் கரைசல் | கூழ்மக் கரைசல் |
|---|---|---|
| 1. | துகள் அளவு **$1A^o - 10A^o$** | துகள் அளவு **$10A^o - 1000A^o$** |
| 2. | நுண்ணோக்கி மூலமும் தெரிவதில்லை. | நுண்ணோக்கியால் மட்டுமே பார்க்க இயலும் |
| 3. | ஒரு படித்தானவை. | பல படித்தானவை. |
| 4. | எளிதில் பரவும் | மெதுவாகப் பரவும். |
| 5. | ஒளியைச் சிதறச் செய்யாது | ஒளியைச் சிதறச் செய்யும். |

# 10 – அணுக்களும் மூலக்கூறுகளும்

**ஒரு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

ஒரு மதிப்பெண் வினாக்கள் புத்தகத்தில் இல்லை

**இரண்டு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. கீழுள்ள எடுத்துக்காட்டுகளிலிருந்து ஐசோடோப், ஐசோபார்களை அடையாளம் காண்க. (ஜூன்2012, ஜூன்2014)

$({}_{18}Ar^{40}, {}_{17}Cl^{35}, {}_{20}Ca^{40}, {}_{17}Cl^{37})$

**ஐசோடோப்புகள் = ${}_{17}C1^{35}$ மற்றும் ${}_{17}C1^{37}$**

**ஐசோபார்கள் = ${}_{18}Ar^{40}$ ${}_{20}Ca^{40}$**

2. நைட்ரஜனின் மூலக்கூறு நிறை 28. அதன் அணுநிறை 14. நைட்ரஜனின் அணுக்கட்டு எண்ணைக் காண்க. (ஏப்2014)

$$\text{அணுக்கட்டு எண்} = \frac{\text{மூலக்கூறு நிறை}}{\text{அணுநிறை}} = \frac{28}{14} = 2$$

3. ஆக்ஸிஜனின் கிராம் மூலக்கூறு நிறை 32கி அதன் அடர்த்தி 1.429கி/க.செமீ. ஆக்ஸிஜனின் கிராம் மூலக்கூறு பருமனைக் கண்டறிக.

$$\text{கிராம் மோலார் பருமன்} = \frac{\text{கிராம் மோலார் நிறை}}{\text{வாயுவின் அடர்த்தி STPல்}} = \frac{32}{1.429} = 22.4 \text{ lit}$$

ஆக்ஸிஜனின் கிராம் மோலார் பருமன் (GMV) = 22.4 lit (STPல்)

4. Cl என்பது குளோரின் அணுவையும், $Cl_2$ என்பது குளோரின் மூலக்கூறையும் குறிப்பவை எனில் அணுக்களுக்கும், மூலக்கூறுகட்கும் உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

| அணுக்கள் (Cl) | மூலக்கூறுகள் ($Cl_2$) |
|---|---|
| **வேதிவினையில் ஈடுபடும் ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள் அணுவாகும்** | **ஒரு தனிமம் அல்லது சேர்மத்தின் அணுக்களின் தொகுதி மூலக்கூறாகும்** |
| **பிணைப்புறாத துகள்** | **பிணைப்புற்ற துகள்** |
| **தனித்தோ அல்லது சேர்ந்தோ காணப்படும். (Cl –ஐப் பொருத்தவரை தனித்து காணப்படாது. இரண்டு அணுக்கள் சேர்ந்தே இருக்கும்)** | **தனித்துக் காணப்படும்** |

5. ஹைட்ரஜனின் கிராம் அணுநிறை 1கி. ஆக்ஸிஜனின் கிராம் அணுநிறை 16கி எனில் நீரின் கிராம் மூலக்கூறு நிறையை கணக்கிடுக.

ஹைட்ரஜனின் அணுநிறை = 1கி
ஆக்ஸிஜனின் அணுநிறை = 16கி
நீரின் ($H_2O$) மூலக்கூறு நிறை = 2(1) + 1(16) = 2 + 16
= 18கி

6. ஒரு மோல் அளவுள்ள எந்த வேதிப்பொருளும் $6.023 \times 10^{23}$ துகள்களைப் பெற்றிருக்கும். $3.0115 \times 10^{23}$ துகள்கள் கொண்ட $CO_2$ வின் மோல்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக.

$$\text{மோல்களின் எண்ணிக்கை} = \frac{\text{மூலக்கூறுகளின் எண்ணிக்கை}}{6.023 \times 10^{23}} = \frac{3.0115 \times 10^{23}}{6.023 \times 10^{23}} = 0.5 \text{ மோல்கள்}$$

**ஐந்து மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. ஒரு அணுவை பற்றிய தெளிவான விளக்கத்தை அளிக்கக்கூடிய நவீன அணுக் கொள்கையானது அலைக்கொள்கை, நிலையில்லா கோட்பாடு மற்றும் தற்போதைய கண்டுபிடிப்புகளையும் கொண்டு உருவானதாகும். இவற்றின் மூலம் நவீன அணுக் கொள்கையின் கோட்பாடுகளை விவரிக்க. (மாரச்2012, ஜுன்2013, ஜுன்2014)

   1. **அணு என்பது வேதிவினையில் ஈடுபடும் மிகச்சிறிய துகள் ஆகும்.**
   2. **அணுக்கள் பிளக்கப்படக்கூடியவை.**
   3. **ஒரு தனிமத்தின் அனைத்து அணுக்களும் எல்லா பண்புகளிலும் ஒத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எ.கா. ஐசோடோப்புகள் = ($_{17}C1^{35}$, $_{17}C1^{37}$).**
   4. **வெவ்வேறு தனிமங்களைச் சேர்ந்த அணுக்கள் சில பண்புகளில் ஒத்திருக்கின்றன. எ.கா. ஐசோபார்கள் = ($_{18}Ar^{40}$, $_{20}Ca^{40}$).**
   5. **ஒரு மூலக்கூறில் உள்ள அணுக்களின் விகிதம் முழுமையானதும் நிர்ணயிக்கப்பட்டதும் ஆகும். ஆனால் அது எளிய விகிதமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.**
      எ.கா $C_{12}H_{22}O_{11}$ – சுக்ரோஸ்
   6. **மாற்றுத் தனிமமாக்கல் முறையில் ஒரு தனிமத்தின் அணுக்களை மற்றொரு தனிமத்தின் அணுக்களாக மாற்றலாம்.**
   7. **ஒரு தனிமத்தின் நிறையை ஆற்றலாக மாற்ற முடியும். இது ஐன்ஸ்டீன் சமன்பாடு $E = mc^2$ ன் படி அமையும்.**

2. ஒரு பருமன் ஆக்ஸிஜன் நிறையும், ஒரு பருமன் ஹைட்ரஜன் நிறையும் உமக்கு கொடுக்கப்பட்டுள்ளன. அவோகெட்ரோ விதிப்படி மூலக்கூறு நிறைக்கும் ஆவி அடர்த்திக்கும் உள்ள தொடர்பை வருவிக்க.

**ஒப்பு மூலக்கூறு நிறை:**

ஒப்பு மூலக்கூறு நிறை என்பது வாயு அல்லது ஆவியில் உள்ள ஒரு மூலக்கூறின் நிறைக்கும் ஒரு ஹைட்ரஜன் அணுவின் நிறைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{வாயு ஒப்பு மூலக்கூறு நிறை} = \frac{\text{வாயு அல்லது ஆவியின் ஓர் மூலக்கூறு நிறை}}{\text{ஒரு ஹைட்ரஜன் அணுவின் நிறை}}$$

**ஆவி அடர்த்தி:**

ஆவி அடர்த்தி என்பது மாறா வெப்பநிலை மற்றும் மாறா அழுத்தத்தில், குறிப்பிட்ட பருமனுள்ள ஒரு ஆவி அல்லது வாயுவின் நிறைக்கும் அதற்கு சமபருமனுள்ள ஹைட்ரஜனின் நிறைக்கும் உள்ள விகிதமாகும்.

$$\text{ஆவி அடர்த்தி} = \frac{\text{ஒரு பருமனுள்ள ஆவி அல்லது வாயுவின் நிறை}}{\text{ஒரு பருமனுள்ள ஹைட்ரஜனின் நிறை}}$$

**அவோகெட்ரோ விதியின் படி**

$$\text{ஆவி அடர்த்தி} = \frac{\text{ஒரு பருமனுள்ள ஆவி அல்லது வாயுவின் நிறை}}{\text{ஒரு பருமனுள்ள ஹைட்ரஜனின் மூலக்கூறு நிறை}}$$

ஹைட்ரஜன் ஈரணு மூலக்கூறு ஆதலால்,

$$\text{ஆவி அடர்த்தி} = \frac{\text{ஒரு பருமனுள்ள ஆவி அல்லது வாயுவின் நிறை}}{2 \times 1 \text{ ஹைட்ரஜன் அணுவின் நிறை}}$$

$$2 \times \text{ஆவி அடர்த்தி} = \frac{\text{ஒரு பருமனுள்ள ஆவி அல்லது வாயுவின் நிறை}}{\text{1 ஹைட்ரஜன் அணுவின் நிறை}}$$

2 x ஆவி அடர்த்தி = ஆவி அல்லது வாயுவின் ஒப்பு மூலக்கூறு நிறை

**2 x ஆவி அடர்த்தி = ஒப்பு மூலக்கூறு நிறை**

3. கீழ்க்கண்டவற்றிற்கு மோல்களின் எண்ணிக்கையைக் கணக்கிடவும். (மார்ச்2013)
அ. $12.046 \times 10^{23}$ அணுக்களைக் கொண்ட தாமிரம். ஆ. 27.95 கி இரும்பு
இ. $1.51 \times 10^{23}$ மூலக்கூறுகளைக் கொண்ட $CO_2$

**அ. $12.046 \times 10^{23}$ அணுக்களைக் கொண்ட தாமிரம்**

$$\text{மோல்களின் எண்ணிக்கை} = \frac{\text{அணுக்களின் எண்ணிக்கை}}{\text{அவகேட்ரோ எண்}} = \frac{12.046 \times 10^{23}}{6.023 \times 10^{23}} = 0.2 \text{ மோல்கள்}$$

**ஆ. 27.95 கி இரும்பு**

$$\text{மோல்களின் எண்ணிக்கை} = \frac{\text{நிறை}}{\text{அணுநிறை}} = \frac{27.95}{55.85} = 0.5 \text{ மோல்கள்}$$

**இ. $1.51 \times 10^{23}$ மூலக்கூறுகளைக் கொண்ட $CO_2$**

$$\text{மோல்களின் எண்ணிக்கை} = \frac{\text{மூலக்கூறு எண்ணிக்கை}}{6.023 \times 10^{23}} = \frac{1.51 \times 10^{23}}{6.023 \times 10^{23}} = 0.25 \text{ மோல்கள்.}$$

# 11 – வேதி வினைகள்

**ஒரு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. $Zn + 2HCl \rightarrow ZnCl_2 + H_2\uparrow$ மேற்கூறிய வினை எந்த வகை வினையைச் சார்ந்தது ? (மாரச்2012)
அ. கூடுகை வினை ஆ. இரட்டை இடப்பெயர்ச்சி வினை
**இ. இடப்பெயர்ச்சி வினை** ஈ. சிதைவுறுதல் வினை
2. செம்பழுப்பு நிறமுள்ள ‘X’ என்ற தனிமத்தைக் காற்றுடன் வெப்பப்படுத்தும்போது ‘Y’ என்ற கறுப்பு நிறச் சேர்மத்தைத் தருகிறது. ‘X’ மற்றும் ‘Y’ என்பது ……….. (**Cu, CuO**/ Pb, PbO).
3. ஒரு மாணவன் pH தாளைக் கொண்டு தூய நீரின் pHஐச் சோதித்தான். pH தாள் பச்சை நிறத்தைக் காட்டியது. எலுமிச்சம் பழச் சாற்றை நீரினுள் விட்டபின் காகிதம் ………… நிறமாக மாறியது (பச்சை / **சிவப்பு** / மஞ்சள்)
4. வேதி எரிமலை என்பது……….. (கூடுகை வினை, **சிதைவுறுதல் வினை**) (ஏப்2014, ஜுன்2014)
5. காரீய நைட்ரேட் படிகங்களை அதிக அளவு வெப்பப்படுத்தும்பொழுது அது ……. வாயுவைக் கொடுக்கிறது மற்றும் அந்த வாயுவின் நிறம் …………
6. சில்வர் நைட்ரேட் மற்றும் சோடியம் குளோரைடு நீர்க் கரைசல்களைக் கலக்கும்போது ………. வீழ்படிவு உடனடியாகக் கிடைக்கிறது. (**வெள்ளை** / மஞ்சள்)
7. அலுமினியம், துத்தநாக சல்பேட் கரைசலிருந்து துத்தநாகத்தை இடப்பெயர்ச்சி செய்கிறது. (துத்தநாகம் அலுமினியத்தைவிட வினைதிறன் மிக்கது / **அலுமினியம் துத்தநாகத்தை விட வினைதிறன் மிக்கது**)
8. பற்சிதைவைத் தடுக்க நாம் நாளும் பல் துலக்க வேண்டும். பொதுவாகப் பயன்படுத்தப்படும் பற்பசை ………… தன்மை கொண்டது. (செப்2013)
9. அசிட்டிக் அமிலத்தில் வினிகர் உள்ளது. தயிரில் உள்ள அமிலம் ……… (லாக்டிக் அமிலம் / டார் டாரிக் அமிலம். (மாரச்2013)
10. $pH = -log_{10}[H^+]$. ஒரு கரைசலின் ஹைட்ரஜன் அயனியின் செறிவு 0.001M எனில், அதன் pH மதிப்பு ………… (**3** / 11 / 14). (ஜுன்2013)

விடை:
1. இடப்பெயர்ச்சி வினை 2. Cu,CuO. 3. சிவப்பு 4. சிதைவுறுதல் வினை 5. $NO_2$, செம்பழுப்பு
6. வெள்ளை 7. அலுமினியம் துத்தநாகத்தை விட வினைத்திறன் மிக்கது 8. காரத் தன்மை
9. லாக்டிக் அமிலம் 10. 3

**இரண்டு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. (i) சுண்ணாம்புக் கல்லைச் சூடுபடுத்தும்போது (ii) மெக்னீசிய நாடாவைக் காற்றில் எரிக்கும்போது எந்த வகையான வேதிவினைகள் நிகழும்? (மாரச்2012, ஜுன்2013, ஜுன்2014)
   (i) சிதைவுறுதல் வினை ($CaCO_3 \longrightarrow CaO + CO_2$)
   (ii) ஆக்ஸிஜனேற்ற வினை ($Mg + O_2 \longrightarrow 2MgO$)

2. நன்கு தெரிந்த சில பொருளின் pH மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது (மாரச்2012,13)

| பொருள் | pH மதிப்பு |
|---|---|
| இரத்தம் | 7.4 |
| சமையல் சோடா | 8.2 |
| வினிகர் | 2.5 |
| வீட்டுப் பயன்பாட்டு அம்மோனியா | 12 |

அட்டவணையை பகுப்பாய்வு செய்து கீழே உள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்.
அ. எந்தெந்தப் பொருள்கள் அமிலத்தன்மை உடையவை?
ஆ. எந்தெந்தப் பொருள்கள் காரத்தன்மை உடையவை?
**அ) வினிகர்**
**ஆ) இரத்தம், சமையல் சோடா, வீட்டு உபயோக அம்மோனியா.**

3. இரும்பு ஆணியை தாமிர சல்பேட் கரைசலினுள் வைக்கும்போது தாமிர சல்பேட் ஏன் நிறம் மாறுகிறது. உன் பதிலுக்கான விளக்கத்தைத்தரவும். (மாரச்2013, ஏப்2014)
   நடைபெறும் வினை: $Fe + CuSO_4 \longrightarrow FeSO_4 + Cu$.
   1. இரும்பு தாமிரத்தை விட வினைத் திறன் மிக்கது.
   2. இவ்வினையில் இரும்பு, காப்பர் சல்பேட்டிலுள்ள காப்பரை இடப்பெயர்ச்சி செய்கிறது.
   3. இரும்பு சல்பேட் உருவாகிறது. எனவே நிறமாற்றம் ஏற்படுகிறது.

4. ஒரு கரைசலின் ஹைடிராக்ஸில் அயனியின் செறிவு $1.0x10^{-8}$ M எனில் அதன் pH மதிப்பு என்ன? (செப்2013, ஜுன்2013, ஏப்2014)
   $pOH = -\log_{10}[OH^-]$
   $= -\log_{10}(1x10^{-8}) = -\log_{10}10^{-8} = -(-8)$
   $pOH = 8$
   $pH = 14 - pOH$
   $pH = 14 – 8 = 6$

5. சம நீளமுள்ள மெக்னீசிய நாடாவைச் சோதனைக் குழாய் A மற்றும் B-யில் எடுத்துக் கொள்ளவும். சோதனைக் குழாய் A-யில் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தையும் சோதனைக் குழாய் B-யில் அசிட்டிக் அமிலத்தையும் சேர்க்கவும். இரண்டு அமிலங்களின் அளவும் செறிவும் சமமாக உள்ளன. இவற்றில் எந்த சோதனைக் குழாயில் வினை அதிக வீரியத்துடன் நடைபெறுகிறது? ஏன்?
   சோதனைக் குழாய் A-ல் வினை அதிக வீரியத்துடன் நடைபெறும்.
   காரணம் : A-ல் உள்ளது HCl. இது வலிமை மிகு அமிலம்; வினைத்திறன் மிக்கது.
   $CH_3COOH$ – வலிமை குறைந்த அமிலம்; வினைத்திறன் குறைவு.

## 12 – தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு

**ஒரு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. புதிய தனிம வரிசை அட்டவணையில் தொடர்களும், தொகுதிகளும் உள்ளன. வரிசைகளும், தொகுதிகளும் முறையே,
   **அ. கிடைமட்டத் தொடர்கள், செங்குத்து வரிசைகள் (தொகுதிகள்).**
   ஆ. செங்குத்து வரிசைகள் (தொகுதிகள்) கிடைமட்ட தொடர்கள்.
2. மூன்றாவது வரிசையில் 8 தனிமங்கள் உள்ளன. அவற்றில் எத்தனை அலோகங்கள் உள்ளன?
3. அனைத்துக் கரிமச் சேர்மங்களுக்கும் அடிப்படையான தனிமம் ………. தொகுதியில் உள்ளது. (**14ஆவது தொகுதியில்** / 15ஆவது தொகுதியில்) (செப்2013, ஜுன்2014)
4. தாதுவிலிருந்து உலோகமானது இலாபகரமானதாகப் பிரித்தெடுக்கப்படுகிறது அலுமினியமானது பாக்ஸைட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இது ……. என அழைக்கப்படுகிறது.(**தாது**/கனிமம்) (மாரச்2013)
5. தங்கம் என்ற தனிமமானது சேர்மமாகக் கிடைப்பது இல்லை. இது காற்று அல்லது நீருடன் வினைபுரிவது இல்லை. இது …….. நிலையில் உள்ளது. (**தனித்தநிலை** / சேர்ந்த நிலை) (மாதிரி2012, செப்2013, ஜுன்2014)

6. உறுதிப்படுத்துதல் : தாமிரப் பாத்திரங்களைத் தூய்மைப்படுத்தப்படவில்லை எனில், பச்சை நிறப் படிமம் தோன்றுகிறது. காரணம் : இந்தப் படிமத்திற்கான காரணம் காரத் தாமிரக் கார்பனேட்
**அ) உறுதிப்படுத்துதல் காரணம் இரண்டும் சரி** ஆ) உறுதிப்படுத்துதல் சரி காரணம் சரியில்லை.
7. சல்ஃபைடு தாதுவை அடர்ப்பிக்கப் பயன்படும் முறை ------------------- (ஜுன்2013, ஏப்2014)
(**நுரை மிதப்பு முறை** / புவியீர்ப்பு முறை)
8. இரும்பு உலோகப் பரப்பின்மீது வேறு உலோகத்தைப் பூசுவதால் துருப்பிடித்தலில் இருந்து தடுக்கலாம். இந்த இரும்பின்மீது துத்தநாகத் துகளை மெல்லியதாகப் பூசினால் அதற்கு …….. என்று பெயர். (**துத்தநாக முலாம் பூசுதல்** / வண்ணப்பூச்சு அடித்தல் / எதிர்முனை பாதுகாத்தல்)
9. எந்த உலோகம் பாதரசத்துடன் சேர்ந்தாலும் அதற்கு இரசக்கலவை என்று பெயர். பற்குழிகளை அடைப்பதற்குப் பயன்படும் இரசக்கலவை …….. (**Ag-Sn இரசக்கலவை** / Cu-Sn இரசக்கலவை) (மாரச்2013, ஜுன்2013)
10. உறுதிப்படுத்துதல்: வெப்பத்தால் ஒட்டி இணைத்தலில் (தெர்மைட் பற்றவைப்பானில்) அலுமினியத்தூளுடன் $Fe_2O_3$ பயன்படுகிறது. காரணம்: அலுமினியத்தூள் ஒரு வலிமையான ஒடுக்கும் காரணி.
காரணம் உறுதிப்படுத்துதலை விளக்கும் வகையில் சரியாக உள்ளதா?

**விடை:**

**1) கிடைமட்டத் தொடர்கள், செங்குத்து வரிசைகள் (தொகுதிகள்) 2) 4 அலோகங்கள் (P, S, Cl, Ar) 3) 14வது தொகுதியில் (கார்பன்) 4) தாது 5) தனித்த நிலை 6) உறுதிப்படுத்துதல், காரணம் இரண்டும் சரி. 7) நுரை மிதப்பு முறை. 8) துத்தநாக முலாம் பூசுதல். 9) Ag-Sn இரசக்கலவை 10) ஆம். சரியாக உள்ளது. (அலுமினியம் $Fe_2O_3$ யை Fe யாக ஒடுக்குகிறது. $Fe_2O_3 + 2Al \longrightarrow 2Fe + Al_2O_3$.)**

**இரண்டு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. இரும்பு துருப்பிடிப்பது வாலை வடிநீரில் நடக்குமா? உன் பதிலுக்கான காரணத்தைக் கூறுக? (மாரச்2012, ஜுன்2014)
**நடக்கும். ஏனெனில், வாலை வடிநீரில் நீர், ஆக்ஸிஜன் உள்ளது.**
2. அலுமினிய ஆக்சைடை கரி கொண்டு ஒடுக்கும் முறையில் அலுமினிய உலோகத்தை ஏன் பெற முடியாது? (ஏப்2014)
**கார்பனை (கரி) விட அலுமினியத்தின் வினைத்திறன் அதிகம். எனவே கரி கொண்டு ஒடுக்கும் முறையில் அலுமினிய உலோகத்தை பெற முடியாது.**
3. இரும்பு அடர் HCl மற்றும் அடர் $H_2SO_4$ உடன் வினைபுரிகிறது. ஆனால் அடர் $HNO_3$ உடன் வினைபுரிவது இல்லை. சரியான காரணத்துடன் உன் விடையை எழுதுக.
**அடர் $HNO_3$ உடன் வினைபுரியும் போது இரும்பு ஆக்ஸைடு படலம் உருவாகி விடுவதால் மேற்கொண்டு வினை நடைபெறுவதில்லை.**
4. அலுமினிய உலோகக் கலவை, வானூர்தியின் பாகங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. அதற்கான காரணங்களை கூறவும். (மாரச்2013, ஜுன்2013)
**அலுமினியம் உலோகக் கலவை இலேசானது. வலிமையானது. அரிப்பைத் தடுப்பது.**
5. X என்ற வெள்ளி போன்ற வெண்மைநிற உலோகம் ஆக்ஸிஜனுடன் சேர்ந்து Y- ஐத் தருகிறது. இதே Y என்ற சேர்மமானது X (உலோகம்) நீராவியுடன் வினைபுரியும் போது ஹைட்ரஜனை வெளியிட்டு கிடைக்கிறது. X மற்றும் Y-ஐக் கண்டுபிடி. (மாரச்2012, அக்2013, செப்2013)
X- அலுமினியம் Y- அலுமினா
முதல் வினை: $4Al + 3O_2 \longrightarrow 2Al_2O_3$.
இரண்டாம் வினை: $2Al + 3H_2O \longrightarrow Al_2O_3 + 3H_2\uparrow$

## 13 – கார்பனும் அதன் சேர்மங்களும்

**ஒரு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. உறுதிப்படுத்துதல்: கரிமச் சேர்மங்களில் உள்ள பிணைப்புகள் சகப் பிணைப்புத் தன்மை கொண்டவை. காரணம் : சகப் பிணைப்பானது அணுவிலுள்ள எலக்ட்ரான்கள் பங்கிடப்படுவதால் ஏற்கிறது. கொடுக்கப்பட்டுள்ள காரணம் உறுதிப்படுத்துவதற்குப் போதுமானதாக உள்ளதா?
2. உறுதிப்படுத்துதல்: வைரம் என்பது கார்பனின் கடினமான புறவேற்றுமை வடிவம் ஆகும். காரணம் : வைரத்திலுள்ள கார்பன் நான்முக வடிவம் உடையது. கொடுக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்துதலுக்குக் காரணம் சரியாக உள்ளதா?
3. உறுதிப்படுத்துதல்: சுய சகப்பிணைப்பின் காரணமாக மிக அதிக அளவு கார்பன் சேர்மங்கள் உருவாகின்றன. காரணம்: கார்பன் சேர்மங்கள் புறவேற்றுமை வடிவத்தின் பண்புகளைப் பெற்றுள்ளன. இந்தக் காரணம் உறுதிப்படுத்துதலுக்குப் போதுமானதாக உள்ளதா?
4. பக்மினிஸ்டர் புல்லரின் ………… ன் புறவேற்றுமை வடிவம் (அக்2012, செப்2013, ஏப்2014)
(நைட்ரஜன் / **கார்பன்** / சல்ஃபர்)

5. கிரா∴பைட் அலோகமாக இருந்தாலும் மின்சாரத்தைக் கடத்துகிறது. இது ………… ன் காரணமாக கடத்துகிறது (**தனித்த எலக்ட்ரான்கள்** / பிணைப்பு எலக்ட்ரான்கள்)
6. மீத்தேனின் வாய்ப்பாடு $CH_4$ அதனைத் தொடரும் அடுத்த $C_2H_6$ ஈத்தேன். இது இரண்டிற்குமுள்ள பொதுவான வேறுபாடு ------------------ (மாரச்2013) (**$CH_2$** / $C_2H_2$)
7. அல்கைன் குடும்பத்தில் உள்ள முதல் சேர்மத்தின் IUPAC பெயர் (மாதிரி2012) (ஈத்தீன் / **ஈத்தைன்**) (ஜுன்2014)
8. கீட்டோன் தொகுதி மற்றும் ஆல்டிஹைடு தொகுதியில் எந்த வினைச்செயல் தொகுதி இறுதியில் உள்ளது?
9. சோதனைக் குழாயில் வைக்கப்பட்டுள்ள X என்ற திடப்பொருளை அசிட்டிக் அமிலத்துடன் சேர்த்து சூடுபடுத்தும்போது Y என்ற நிறமற்ற, மணமற்ற வாயு வெளிவருகிறது. இந்த வாயு சுண்ணாம்பு நீரைப் பால்போல மாற்றுகிறது. X மற்றும் Y-ஐக் கண்டுபிடிக்க. (பெயர் அல்லது வாய்பாடு)
10. உறுதிபடுத்துதல்: எத்தனால் தன்இயல்பை இழத்தலால் அது குடிப்பதற்கு ஏற்றது அல்ல.
காரணம் : மெத்தனால் சேர்ப்பதால் எத்தனால் தன் இயல்பை இழக்கிறது.
மேற்கூறிய காரணம் உறுதி படுத்தலுக்கான உரிய விளக்கமா என்பதை சரிபார்க்கவும்.

விடை:

1. **ஆம். கார்பன் தனது 4 இணைதிறன் e⁻ கள் மூலம் மற்ற அணுக்களுடன் பங்கீட்டின் அடிப்படையிலேயே பிணைப்பை உருவாக்குகிறது.**
2. **காரணம் சரியில்லை. ஒவ்வொரு கார்பன் அணுவும், அடுத்துள்ள நான்கு கார்பன் அணுக்களுடன் பிணைப்புற்று கடினமான முப்பரிமாண அமைப்பை உருவாக்குகிறது.**
3. **காரணம் சரியில்லை. கார்பனின் இணைதிறன் 4 என்பதால், 4 பிற கார்பன் அணுக்களுடன் சேர்ந்தும் பிணைப்புகளை உருவாக்க முடியுமென்பதால் அதிக சேர்மங்களை உருவாக்குகின்றன.**
4. **கார்பன் 5. தனித்த எலக்ட்ரான்கள் 6. $CH_2$ 7. ஈத்தைன் 8. – CO – ஆகும்.**
**(காரணம்: கீட்டோனின் வினைசெயல் தொகுதி –CO–. ஆல்டிஹைடின் வினைசெயல் தொகுதி –CHO–**
**இதனை** $\overset{H}{\underset{|}{}}$ C=O **இவ்வாறு எழுதலாம். இதில் இறுதியில் உள்ள தொகுதி –CO– ஆகும்.)**

**9. X: $Na_2CO_3$ Y: $CO_2$**

$$2CH_3COOH + \underset{(X)}{Na_2CO_3} \longrightarrow 2CH_3COONa + \underset{(Y)}{CO_2}\uparrow + H_2O$$

**10.** சரியே. **மெத்தனால் கலந்த எத்தனால் தன் இயல்பை இழந்து விஷச்சாரயமாக மாறுகிறது. அதனை பருகுவதால் கண்பார்வை பறிபோதல், உயிரிழப்பு ஏற்படலாம். எனவே அது குடிப்பதற்கு ஏற்றதல்ல.**

**இரண்டு மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. $C_4H_{10}$ என்ற மூலக்கூறு வாய்ப்பாடு கொண்ட அனைத்து மாற்றியங்களையும் எழுதி அதற்குரிய IUPAC பெயரிடு.

**1. $CH_3 – CH_2 – CH_2 – CH_3$**
பொது பெயர்: **n -** பியூட்டேன்
**IUPAC** பெயர்: பியூட்டேன்

**2.** $CH_3 – \underset{\displaystyle |\atop CH_3}{CH} – CH_3$ **பொது பெயர்: ஐசோ – பியூட்டேன்**
**IUPAC பெயர்: 2 மெத்தில் புரொப்பேன்**

2. வைரம் கார்பனுடைய புறவேற்றுமை வடிவங்களுள் ஒன்றாகும். அதன் கடினத்தன்மைக்கான காரணத்தைக் கூறுக. (மாரச்2013)
**வைரத்திலுள்ள ஒவ்வொரு கார்பன் அணுவும் மற்ற நான்கு கார்பன் அணுக்களுடன் பிணைப்புற்று, கடினமான முப்பரிமாண அமைப்பை உருவாக்குகிறது.**
3. ஊறுகாய், பதப்படுத்தலுக்குப் பயன்படும் A என்ற கரிமச் சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாடு $C_2H_4O_2$ இச்சேர்மம் எத்தனாலுடன் வினைபுரிந்து இனிய மணமுடைய சேர்மம் Bயைத் தருகிறது.
i) சேர்மம் A மற்றும் B யைக் கண்டுபிடி.
ii) இம்முறையின் பெயரெழுதி அதன் வேதிச்சமன்பாட்டை எழுதுக.
**(i) A – எத்தனாயிக் அமிலம் (அசிட்டிக் அமிலம்) B – எத்தில் எத்தனோயேட் (எத்தில் அசிட்டேட்)**
**(ii) எஸ்டராக்குதல் வினை**

$$\underset{\text{(எத்தனாயிக் அமிலம்)}\ A}{CH_3COOH} + \underset{\text{(எத்தனால்)}}{C_2H_5OH} \xrightarrow{\text{அடர் } H_2SO_4} \underset{\text{(எத்தில் எத்தனோயேட்)}\ B}{CH_3COOC_2H_5} + H_2O$$

4. $C_2H_6O$ என்ற மூலக்கூறு வாய்பாடுடைய A என்ற கரிமச் சேர்மம் காரம்கலந்த $KMnO_4$ முன்னிலையில் ஆக்ஸிஜனேற்றம் அடைந்து அதே கார்பன் எண்ணிக்கையுள்ள B என்ற அமிலத்தை தருகிறது. சேர்மம் A யானது மருத்துவமனைகளில் காயங்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. சேர்மம் A மற்றும் B யை கண்டுபிடிக்க. A யை, B யாக மாற்றும் வேதிச் சமன்பாட்டைத் தருக.
**A : $CH_3$-$CH_2$-OH** எத்தனால் **B: $CH_3$- COOH** அசிட்டிக் அமிலம்

$$\underset{\substack{\text{எத்தனால்}\\ \text{A}}}{CH_3CH_2OH} \xrightarrow[\text{[o]}]{\text{காரம் கலந்த } KMnO_4} \underset{\substack{\text{எத்தனாயிக் அமிலம்}\\ \text{B}}}{CH_3COOH} + H_2O$$

**ஐந்து மதிப்பெண் புத்தக வினாக்கள்:**

1. கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் கோடிட்ட இடங்களை தகுந்த மூலக்கூறு வாய்ப்பாட்டால் நிரப்பவும். (ஜுன்2014)

| வ. எண் | அல்கேன் | அல்கீன் | அல்கைன் |
|---|---|---|---|
| 1. | $C_2H_6$<br>ஈத்தேன் | ______<br>ஈத்தீன் | $C_2H_2$<br>ஈத்தைன் |
| 2. | __________<br>புரோப்பேன் | $C_3H_6$<br>புரோப்பீன் | __________<br>புரோப்பைன் |
| 3. | $C_4H_{10}$<br>பியூட்டேன் | $C_4\ H_8$<br>பியூட்டீன் | __________<br>பியூட்டைன் |

| வ. எண் | அல்கேன் | அல்கீன் | அல்கைன் |
|---|---|---|---|
| 1. | $C_2H_6$ அல்லது **$CH_3$-$CH_3$**<br>ஈத்தேன் | **$C_2H_4$** அல்லது **$CH_2$=$CH_2$**<br>ஈத்தீன் | $C_2H_2$ அல்லது **$CH\equiv CH$**<br>ஈத்தைன் |
| 2. | **$C_3H_8$** அல்லது **$CH_3$-$CH_2$-$CH_3$**<br>புரோப்பேன் | $C_3H_6$ அல்லது **$CH_3$-CH=$CH_2$**<br>புரோப்பீன் | **$C_3H_4$** அல்லது **$H_3C$-C=CH**<br>புரோப்பைன் |
| 3. | $C_4H_{10}$<br>பியூட்டேன் | $C_4\ H_8$<br>பியூட்டீன் | **$C_4H_6$**<br>பியூட்டைன் |

2. படிவரிசையானது ஹைட்ரோகார்பன்களின் பண்புகளை விளக்கும் தன்மையுடையது இக்கூற்றை படிவரிசையின் சிறப்பியல்புகள் மூலம் விளக்குக.

படிவரிசையிலுள்ள அடுத்தடுத்த உறுப்புளின் பொது வித்தியாசம் **$CH_2$.** மூலக்கூறு நிறை வித்தியாசம் **14 amu.** ஒரே வகைத் தனிமங்களையும், வினைத் தொகுதிகளையும் பெற்றிருக்கும். படிவரிசையிலுள்ள அனைத்து உறுப்புகளையும் ஒரே பொதுவாய்ப்பாட்டால் குறிக்கலாம்.

உ.ம். அல்கேன் $C_nH_{2n+2}$

அல்கீன் $C_nH_{2n}$

அல்கைன் $C_nH_{2n-2}$

மூலக்கூறு நிறை அதிகரிப்பைப் பொறுத்து இயற்பண்புகள் ஒழுங்கான முறையில் மாறுகின்றன. எல்லா சேர்மங்களும், ஒத்த வேதிவினைகளில் ஈடுபடுகின்றன. எல்லா சேர்மங்களையும் ஒரே பொதுவான முறையில் தயாரிக்க முடியும்.

3. பின்வருவனவற்றின் பொதுப்பெயர் மற்றும் IUPAC பெயர்களை எழுதுக. (மாரச்2013, ஏப்2014)

அ) $CH_3\,CH_2CHO$ ஆ) $CH_3\,COCH_3$ இ) $CH_3\,\underset{\displaystyle OH}{\underset{|}{C}H}\,CH_3$ ஈ) $CH_3\,COOH$ உ) HCHO

| | சேர்மங்கள் | பொதுப்பெயர் | IUPAC பெயர் |
|---|---|---|---|
| அ) | **$CH_3$-$CH_2$-CHO** | புரொப்பியனால்டிஹைடு | புரொப்பனேல் |
| ஆ) | **$CH_3$-CO-$CH_3$** | டை மெத்தில் கீட்டோன் (அசிட்டோன்) | புரொப்பனோன் |
| இ) | **$CH_3$-$\underset{\displaystyle OH}{\underset{|}{C}H}$-$CH_3$** | ஐசோ புரொப்பைல் ஆல்கஹால் | 2- புரொப்பனால் |
| ஈ) | **$CH_3COOH$** | அசிட்டிக் அமிலம் | எத்தனாயிக் அமிலம் |
| உ) | **HCHO** | பார்மால்டிஹைடு | மெத்தனேல் |